01.04.2026.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 6/2026</u>

அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிருஷ்ணராஜ் | | |
| த/பெ | ராஜேந்திரன் | | |
| கிராமம் | திருவெண்ணைநல்லூர் | தொழில் | விவசாயம் |
| தாலுக்கா | திருவெண்ணைநல்லூர் | வயது | 36 /2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 01.04.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரா‌மணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 விஷால், அ.சா.2 சரவணன் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

<u>(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.</u>

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

கடந்த 2.06.2021- ம் தேதி மாலை 04.00 மணியளவில் எங்கள் ஊரைச் சேர்ந்த சுந்தரம் மகன் அருளும், நானும் திருவெண்ணைநல்லூர் மணக்குள விநாயகர் மருத்துவணை அருகில் நின்றுக்கொண்டிந்த போது, அருணாச்சலம் மகன் அருள், ஏழுமலை மகன் அருண் இருவரும் விஷால்

ஓட்டிவந்த TN33 BP 2446 என்ற மோட்டார் சைக்கிளை வழி மறித்து மோட்டார் சைக்கிளின் சாவியை எடுத்துக்கொண்டு விஷாலை அழைத்துக் கொண்டு சென்றார்கள் என்றும், பிறகு சிறிது நேரத்தில் PY 05 E 2507 என்ற போலினோ காரில் வந்த நபர்கள் விஷாலை இழுத்து காரில் போட்டு கொண்டு சென்று விட்டார்கள் என்றும், போலீஸ் விசாணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. மறுநாள் விஷால் மருத்துவணைக்கு சென்று, திருவெண்ணைநல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றும், நான் கேள்விப்பட்டேன் என்றும், மேலும், விஷாலை காரில் கடத்திச் சென்ற மிதுன்ராஜ், கணேசன், இமான், விமல் ஆகியோர்கள் தாக்கிய விபரம் மற்றும் விழுப்புரம் அருகே இரயில் வே டிராக் முடியும் இடத்தில் தாக்கிய விபரம் குறித்தும், அங்கிருந்து விஷால் தப்பிய விபரம் குறித்தும் பின்பு தெரிந்து கொண்டேன் என்றும் போலீசார் விசாரணையில் தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

<u>இல்லை.</u>

<u>மறுவிசாரணை</u>

<u>இல்லை</u>